1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் தடை நீக்க உத்திரவு பிறப்பிக்கப் படும்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரியத்தில் தேர்தல் நடத்த அரசுக்கு ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சந்தியமங்கலம் ஒன்றியத்திலுள்ள உக்கரம் ஊராட்சி பற்றிய கேள்வி.

திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் குறைவாக உள்ள ஊராட்சிகளுக்கு ஹவுசிங் டாக்ஸ் மேட்சிங் கிராண்ட் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்காது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பகுதிகளிலே பேரூராட்சிகள் வருமானம் இல்லாமலே இருக்கின்றன. அதற்கு அருகிலே மிகச் சிறிய ஊராட்சிகள் கூட 5, 6 லட்சம் ரூபாய் வருவாய் உள்ளவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் அந்த ஊராட்சி மன்றங்களையும் பேரூராட்சி மன்றங்களையும் இணைத்து அந்தப் பேரூராட்சிகளுக்கு வருவாய் கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய எல்லா ஆலோசனைகளையும் அரசு விதித்த தடையை நீக்கியதற்குப் பிறகு ஆங்காங்கே உள்ளவர்கள் அதற்கென மனுச் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

வேதாரணியம் பேரூராட்சிக்கு உப்பிலாக்கா நிதி

47—(*வினா எண் 9408) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரணியம் பேரூராட்சி 6-வது பாலத்திற்கு உப்பிலாக்கா நிதியுதவ முன்வந்தது அரசுக்குத் தெரியுமா?

[1987 ஏப்ரல் 7

(ஆ) ஆம் எனில், அதை பயன்படுத்திக்கொள்ள எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வேதாரணியம் பேரூராட்சியில் நிதி வசதி இன்மையால் நடைப்பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

மாநிலத்தில் கூடுதல் நியாய விலைக் கடைகள்.

141—(* வினா எண் 11572) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் கூடுதலாக நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) எதுமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கார்டுகள் கணக்கெடுக்கிற பணி 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக தொடங்கப்பட்டு அப்போது குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டன. இப்போது கொடுத்த ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே புதிய கார்டுகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா? குடும்பக் கார்டுகள் சம்பந்தமான கணக்கை எடுக்கிறபோது மாநிலம் முழுவதும் இருக்கின்ற நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையும் உயர வேண்டும். அந்தச் சமயத்தில் அந்த நியாய விலைக் கடைகளைக் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS